I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
<u>M.C.O.P.NO.512/2022</u>

| | | |
|---|---|---|
| Name | : | Geetha |
| Husband Name | : | Parandhaman |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.04.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 12.50 p.m

**<u>முதல் விசாரணை</u>**

நான் M.A. படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ம.சா.ஆ. 1 – முதல் தகவல் அறிக்கை

ம.சா.ஆ. 2 – பிரேத பரிசோதனை அறிக்கை

ம.சா.ஆ. 3– வாரிசு சான்று

ம.சா.ஆ. 4– லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை

ம.சா.ஆ. 5– குற்றப்பத்திரிக்கை

ம.சா.ஆ. 6– இறந்தவரின் ஓட்டுனர் உரிமம்

ம.சா.ஆ. 7– லாரி ஓட்டுனரின் கணினி வழியில் எடுக்கப்பட்ட ஓட்டுனர் உரிமம்.( அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

ம.சா.ஆ. 8– லாரியின் காப்பீட்டு நகல்

ம.சா.ஆ. 9– இறந்தவரின் தமிழ்நாடு அரசு வழங்கிய நடத்துனர் அடையாள அட்டை

ம.சா.ஆ. 10– சம்பள சான்று ( pay slip)– கணினி வழி அசல்( சம்மந்தப்பட்ட அதிகாரி மூலம் தான் வருமானம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

ம.சா.ஆ. 11– இறந்தவரின் வங்கி கணக்கு புத்தகம்

ம.சா.ஆ. 12– இறந்தவரின் ஆதார் கார்டு ( அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

ம.சா.ஆ. 13– 1வது மனுதாரரின் ஆதார் கார்டு ( அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவரின் வேலையை எனக்கு வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை எப்போது கிடைக்கும் என்று தெரியவில்லை. குடும்ப பென்ஷன் எவ்வளவு வருகிறது என்றால் அவர் வேலைக்கு சேர்ந்து 6 , 7 வருடங்கள் தான் ஆகிறது எனவே பென்ஷன் வரவில்லை. நான் பென்ஷன் கேட்டு மனு கொடுத்துள்ளேன். அதற்கு கொடுக்க முடியாது என்று பதில் கொடுத்துள்ளார் அந்த பதிலை வைத்துள்ளேனா என்றால் அவர் எழுத்து மூலமான பதில் கொடுக்கவில்லை.

நான் சம்பவத்தை பார்க்கவில்லை. அவர் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தார். அவருக்கு தலையில் தான் அடிப்பட்டது என்றால் சரிதான். லாரி சென்று கொண்டிருந்ததா அல்லது நின்று

கொண்டிருந்த லாரியா என்று எனக்கு தெரியாது. நான் என் பிரமாண வாக்கமூலத்தில் நின்று கொண்டிருந்த லாரி என்று சொல்லியுள்ளேன் என்றால் அப்படிதான் பார்த்தவர்கள் சொன்னார்கள் நான் பார்க்கவில்லை.

என் கணவர் மெதுவாகதான் போவார் என்றால் சரிதான். அவர் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் "என் கணவர் ஓட்டி சென்று மோட்டார் சைக்கள் மோதல் நேர்ந்தது " என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். என் கணவர் மெதுவாக போயிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. அவர் வேகமாக போனதால் தான் அவர் பிரேக் பிடிக்காமல் லாரி மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. அவர் தலைகவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் அடிப்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போனேனா என்றால் போனேன். சம்பவம் நடந்தபின் போன் வந்ததால் போனேன். அவர் அணிந்திருந்த தலைகவசம் என்ன ஆனது என்றால் உடைந்துவிட்டிருந்தது. அதன் புகைப்படம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டில் தான் உள்ளேன்.

அவர் basic pay ரூ.20,225 என்றால் சரிதான். அந்த தொகையை தான் இழப்பீடு கண்கிடுவதற்கு எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. அவர் மொத்த சம்பளம் ரூ. 28,396. அவருக்கு July மாதம் ரூ. 20,028 தான் அவர் வங்கியில் செலுத்தப்பட்டது என்றால் அவருக்கு பிடிப்பு போக அவருக்கு வந்துள்ளது. அதுபோல் மாதாமாதம் சம்பளம் வேறுபடும் என்றால் சரிதான்.

எனக்கு குடும்ப பென்ஷன் வருகிறது என்றாலும் நான் தான் மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. இந்த விபத்து என் கணவரின் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றால் சரியல்ல. எனவே லாரியின்

காப்பீட்டு கழகம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 01.10 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.